Name of the Newspaper: T-HINDU Date: 23/10/17

## மெட்ரோ ரயில் 20% கட்டண சலுகை

# தீபாவளியை முன்னிட்டு 2 நாளில் 73,500 பேர் பயணம்

- பயணிகளின் எண்ணிக்கை 20% அதிகரிப்பு

■ சென்னை

மெட்ரோ ரயில் கட்டண சலுகையால் பயணிகளின் எண்ணிக்கை சராசரியாக 20 சதவீதம் அதிகரித்துள்ளது. இதற்கிடையே, தீபாவளியையொட்டி கடந்த 16, 17-ம் தேதிகளில் மட்டும் 73,500 பேர் பயணம் செய்துள்ளனர்.

சென்னையில் 2 வழித்தடங்களில் மொத்தம் 45 கி.மீ. தூரத்துக்கு நடந்து வரும் மெட்ரோ ரயில் பணிகளில் 80 சதவீதம் பணிகள் நிறைவடைந்துள்ளன. தற்போது, விமான நிலையம் - சின்னமலை – கோயம்பேடு - நேரு பூங்கா வரையில் மெட்ரோ ரயில்கள் தினமும் இயக்கப்பட்டு வருகின்றன. அடுத்தகட்டமாக, சென்ட்ரல், எழும்பூர் ரயில் நிலையங்களை இணைக்கும் வகையில் மெட்ரோ ரயில் பணிகள் இறுதிகட்டத்தை நெருங்கியுள்ளன.

அடுத்த ஆண்டு இறுதிக்குள் முதல்கட்ட மெட்ரோ ரயில் திட்டப்பணிகளை முழுவதுமாக முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

மெட்ரோ ரயிலில் பயணம் செய்ய மக்களை ஊக்குவிக்கும் வகையில் 20 சதவீத கட்டணச் சலுகை கடந்த ஆகஸ்ட் 28-ம் தேதி அறிவிக்கப்பட்டது. இந்த கட்டணச் சலுகை வரும் 31-ம் தேதி வரையில் அமலில் இருக்கும். இந்த கட்டணச் சலுகை அறிவித்தபிறகு பயணிகள் எண்ணிக்கை 20 சதவீதம் அதிகரித்துள்ளது.

> முதல்கட்ட மெட்ரோ பணிகள் முடிந்து முழு அளவில் ரயில்கள் இயக்கப்படும்போது, பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சமாக இருக்கும்.

### எண்ணிக்கை 2 லட்சம்

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் அதிகாரிகள் கூறும்போது, "மெட்ரோ ரயில் பயணத்தை மக்களிடம் ஊக்குவிக்கும் வகையில் 20 சதவீத கட்டண சலுகை அளிக்கப்பட்டுள்ளது. இது பொதுமக்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றுள்ளது.

இதனால், தினமும் சராசரியாக பயணம் செய்வோரின் எண்ணிக்கை 20 சதவீதம் அதிகரித்துள்ளது. அதிகபட்சமாக தீபாவளி பண்டிகையையொட்டி கடந்த 16-ம் தேதியில் 36,000 பேரும், 17-ம் தேதியில் 37,500 பேரும் பயணம் செய்துள்ளனர். முதல்கட்ட மெட்ரோ பணிகள் முடிந்து முழு அளவில் மெட்ரோ ரயில்கள் இயக்கப்படும்போது, பயணிகளின் எண்ணிக்கை 2 லட்சமாக இருக்கும்" என்றனர்.